


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சமூக பாதுகாப்பு துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பாக, சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மனித சங்கிலியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (22.10.2016) கொடியசைத்து துவக்கி வைத்து, கலந்து கொண்டார். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. எஸ். குமுதா உடனுள்ளார்.

செ.வெ.எண்: 747/2016 நாள்: 22.10.2016

**பெண் குழந்தைகளை பாதுகாப்பது நமது கடமை,**
**சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு**
**நடைபெற்ற மனித சங்கிலியில்**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சமூக பாதுகாப்பு துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த, சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, மனித சங்கிலியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (22.10.2016) கொடியசைத்து துவக்கி வைத்து, கலந்து கொண்டு தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 11-ம் தேதி சர்வதேச பெண்குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பாக குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள சுமார் 1,000 மாணவிகள் பங்கேற்ற மனித சங்கிலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து நாகர்கோவில் எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி வரை இன்று நடைபெற்றது.

தற்போது ஆண்களுக்கு இணையாக பெண்களும் எல்லா துறைகளிலும் பணியாற்றி வருகிறார்கள். இவர்களை பாதுகாப்பது நமது கடமையாகும். மேலும் பெண் கல்வியை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், இந்நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் நாகர்கோவில் எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் சர்வதேச பெண் குழந்தைகள் தினவிழாவை முன்னிட்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, வெற்றிபெறும் மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளது என தெரிவித்தார்.

முன்னதாக பெண் குழந்தைகள் வாழ்வில் ஒளி ஏற்றுவோம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி செய்வோம், இலட்சியத்துடன் வளரும் பெண் குழந்தைகள் வல்லரசு நாட்டின் இரும்புக் கோட்டைகள், பெண் குழந்தையைப் பேணுவோம் நாட்டில் வளமையைக் காணுவோம், ஆயகலைகள் பெண் குழந்தைக்கு ஏன்? தன்னை காக்கும் தற்காப்பு கலையே மேல் போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லை (ஸ்டிக்கர்) அரசு வாகனங்களில் ஒட்டினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. எஸ். குமுதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ப.காந்தி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.